## அரையாண்டுத் தேர்வு – 2022

12220.

12.ஆம் வகுப்பு

## பொதுத்தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்: 90

பகுதி – I

14X1=14

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.
கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவேண்டும்.

1. "மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
1.பாண்டியரின் சங்கத்தில் கொழுவிருந்து 2.பொதிகையில் தோன்றியது 3.வள்ளல்களைத் தந்தது
அ. 1மட்டும் சரி ஆ. 1,2 இரண்டும் சரி இ.3 மட்டும் சரி ஈ 1,3 இரண்டும் சரி

2.நரம்புகளுக்குள் வீணை மீட்டிக்கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ.சூரிய ஒளிக்கதிர், ஆ.மழை மேகங்கள், இ.மழைத்துளிகள், ஈ.நீர் நிலைகள்.

3.இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது அ.வக்கிரம், ஆ.அவமானம், இ.வஞ்சனை, ஈ.இவை அனைத்தும்.

4. சுரதா நடத்திய கவிதை இதழ் அ.இலக்கியம், ஆ.காவியம், இ.ஊர்வலம், ஈ.விண்மீன்.

5.சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம்
அ.நேரடி,மறைமுக வேலைவாய்ப்புகளின் களம் ஆ.மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை,
இ.மென்பொருள் வன்பொருள் வாகன உற்பத்தியில் பங்கு ஈ.அ,ஆ,இ- அனைத்தும்

6.வேறுபட்டதைக் குறிப்பிடுக.
அ.அண்மைக் காட்சித் துணிப்பு, ஆ.சேய்மை காட்சித் துணிப்பு இ.நடுகாட்சித் துணிப்பு, ஈ.காட்சி மறைவு

7. இலக்கியத்தில் மேலாண்மை என்னும் நூலை எழுதியவர்
அ.வெ.இறையன்பு ஆ.தமிழ்நதி இ.முகமது இராவுத்தர் ஈ.ஐராவதம் மகாதேவன்

8.ச.த.சற்குணரின் உரையைக் கேட்கத் தூண்டப்பெற்ற மயிலை சீனி.வேங்கடசாமி எழுதிய நூல்
அ.பௌத்தமும் தமிழும் ஆ.இசுலாமும் தமிழும் இ.சமணமும் தமிழும் ஈ.கிறித்துவமும் தமிழும்

9.மகாகவி பாரதியின் கடிதங்களை பதிப்பித்தவர் ————
அ.ரா.அ.பத்மநாபன் ஆ.சிற்பி இ.தி.சு.நடராஜன் ஈ.பாரதிதாசன்.

10.தமிழில் திணைப்பாகுபாடு ———— அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
அ.பொருட்குறிப்பு ஆ.சொற்குறிப்பு இ.தொடர் குறிப்பு ஈ.எழுத்துக்குறிப்பு

11. எத்திசை என்னும் சொல்லிற்குரிய புணர்ச்சி விதியைத் தேர்வு செய்க.
அ.ஈறுபோதல் ஆ.இனமிகல் இ.இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்.
ஈ.உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

12. படிமம் என்பதன் பொருள் அ.சொல் ஆ.செயல் இ.காட்சி ஈ.ஒலி

13.தொன்மத்திற்குப் பொருந்தா ஒன்றைத் தேர்க.
அ.கர்ணன் தோற்றான் போ ஆ.வயதில் சிறியவள் ஆனாலும் தலைவி இ.இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு ஈ.இந்தா போறான் தருமன்

14.மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது? அ.குறியீடு ஆ.படிமம் இ.அங்கதம் ஈ.தொன்மம்

பகுதி - II

பிரிவு - 1

இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடைதருக எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3X2=6

15.கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட தமிழின் துணைவேண்டும் என்கிறார்?

16.வசனம் கவிதை வேறுபாடு தருக.

17.எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

18.முகம் முகவரியற்றுப் போனதற்கு சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடையளி 2X2=4

19.நடை அழகியல் பற்றி தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

20.அக்காலத்துக் கல்விமுறையில் மனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் எவை?

21.பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7X2=14

22.திருவளர்ச்செல்வன் திருவளர் செல்வன் – இவற்றில் சரியான தொடர் எது? இலக்கண விதி யாது?

23. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?

24.காப்பியத்தை குறிக்கும் பிற பெயர்கள் யாவை?



CamScanner

25.கலை களை கழை – மயங்கொலிச் சொற்களை தொடரமைக்க.
26.உள்ளங்கை நெல்லிக்கனிபோல – உவமைத்தொடரை சொற்றொடராக அமைத்து எழுதுக.
27.ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லவற்றை கற்று கொடுக்கும். – வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.
28.இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சிக்கோ – பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
29.திரை காண் கைதட்டல் மக்கள் - தொடரமைக்க.
30.File, Eraser - கலைச்சொல் தருக.

பகுதி - III

பிரிவு – 1

ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடைதருக எவையேனும் இரண்டனுக்கு விடையளி 2X4=8

31.'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
32.'வாயிலோயே' எனத் தொடங்கும் ஔவையாரின் புறநானூற்றுப் பாடல் பாடாண் திணைக்கு உரியது என்பதை நிறுவுக.
33.பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்?
34.நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை கூறுக.

பிரிவு - 2 2X4=8

எவையேனும் இரண்டனுக்கு விடையளி
35.மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில் இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.
37.திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
38.வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.

பிரிவு – 3 3X4=12

39.நிரல் நிறை அணியை சான்று தந்து விளக்கு. (அல்லது)
"துஞ்சினார் செத்தாரின் வேறுஅல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுஉண்பார் கள்உண் பவர்." - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?
41.நெய்தல் திணை (அல்லது) செவியறிவுறூஉ துறையைச் சான்று தந்து விளக்கு
42. மையக்கருத்தை கூறி ஏற்புடைய நயங்கள் மூன்றை எழுதுக.

முச்சங்கம் கூட்டி முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச் சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங்க ளெல்லாம் அமைத்த பெருமாட்டி! - கண்ணதாசன்

43.தமிழாக்கம் தருக.
Popular as the 'Cultural Capital' of India. Tamil Nadu is extremely well-known for its marvellous temples and other architectural gems. The state rose to prominence primarily because of its well known and outatanding Tanjore Paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.
காது கேளாதவர்களுக்கான மாற்று வினா.
கீழ்க்காணும் பத்தியைப் படித்து நான்கு வினாக்களை உருவாக்குக.
மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும்.

பகுதி – IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் இருபக்கங்களுக்கு மிகாமல் விடையளி 3X6=18

44.அ)பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக. (அல்லது)
ஆ)'சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும்' - இக்கூற்றை முப்பால்வழி விளக்குக.
45.அ)கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக. (அல்லது)
ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" – நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.
46.அ)'சாலை விபத்தில்லாத் தமிழ்நாடு' - இக்கூற்று நனவாக நாம் செய்யவேண்டியன யாவை?(அல்லது)
ஆ)மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

பகுதி - V

குறிப்பு : அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 4+2=6

47.அ)"ஒருமையுடன்" எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை எழுதுக.
ஆ)"அது" என முடியும் குறளை எழுதுக.



CamScanner

## அரையாண்டுத் தேர்வு - 2022

**11 - ஆம் வகுப்பு** **பொதுத்தமிழ்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 90

**குறிப்பு : விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.**

### பகுதி - I

**குறிப்பு : (1) அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (2) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.** 14 X 1 = 14

1. பாயிரம் இல்லது ........... அன்றே.
அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. நற்றிணை நூலின் அடிவரையறை ...... அ) 3 - 9 ஆ) 6 - 11 இ) 9 - 12 ஈ) 4 - 8
3. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
4. "புகழ் எனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்" ; என்ற அடிகள் இடம் பெற்ற நூல் எது? ஆசிரியர் யார்?
அ) குறுந்தொகை - ஔவையார் ஆ) புறநானூறு - கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
இ) திருக்குறள் - திருவள்ளுவர் ஈ) புறநானூறு - கோவூர்கிழார்
5. ஏழைகளின் கற்பக விருட்சம் ........... அ) வாழை மரம் ஆ) பனைமரம் இ) மருத மரம் ஈ) நெல்லி மரம்
6. KVT COMPLEX என்பது அ) கொச்சி, வஞ்சி, தொண்டி, வளாகம் ஆ) காஞ்சி, வடகரை, தென்காசி வளாகம்
இ) கொற்கை, வஞ்சி, தொண்டி, வளாகம் ஈ) கொற்கை, தொண்டி, வஞ்சி வளாகம்
7. "ஆசிரியரால் சர்வ வல்லமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த இயலும்" என்ற சான்றோர்,
அ) ஹென்றி ஆல்பர்ட் ஆ) ஹென்றி ஆப்ரகாம் இ) ஹென்றி லூயிஸ் ஈ) ஹென்றி ஆடம்ஸ்
8. **கூற்று** 1 : தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.
**கூற்று** 2 : அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் ஃப்ரெஸ்கோ வகையைச் சார்ந்தவை.
அ) கூற்று 1 சரி கூற்று 2 தவறு ஆ) கூற்று 1 தவறு கூற்று 2 சரி இ) கூற்று இரண்டும் தவறு ஈ) கூற்று இரண்டும் சரி
9. 'எழுத்து' இதழைத் தொடங்கியவர் ...... அ) ரா.பி. சேதுப்பிள்ளை ஆ) சி.சு.செல்லப்பா இ) வ.வே.சு. ஐயர் ஈ) சுஜாதா
10. 'பிம்பம்' கதையின் ஆசிரியர் அ) ஜெயகாந்தன் ஆ) புதுமைப்பித்தன் இ) பிரபஞ்சன் ஈ) வண்ணநிலவன்
11. 'செம்மண்' என்ற சொல்லின் புணர்ச்சி விதி
அ) ஆதி நீடல் ஆ) அடியகரம் ஐ ஆதல் இ) ஈறுபோதல் ஈ) முன்னின்ற மெய் திரிதல்
12. Prefix என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையான தமிழ்க் கலைச்சொல்லை எழுதுக.
அ) இனக்குழு ஆ) பின்னொட்டு இ) முன்னொட்டு ஈ) புதிர் சூழல்
13. அறிவைத் தேடிப் போகுமிடம், உலகம் அறிய உதவுமிடம்
அ) வெளிநாடு ஆ) நூலகம் இ) சுற்றுலாத்தலம் ஈ) பள்ளிக்கூடம்
14. அருந்தியது அற்றது போற்றி உணின் ............. வேண்டியதில்லை.
அ) மருத்துவமனை ஆ) உணவு இ) மருத்துவர் ஈ) மருந்து

### பகுதி - II (பிரிவு - 1)

**எவையேனும் மூன்று வினாக்களுக்குவிடை தருக.** 3 X 2 = 6

15. தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?
16. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதிச் சென்றது?
17. சீர்தூக்கி ஆராயவேண்டிய ஆற்றல்கள் யாவை?
18. ஒழுக்கமும் பொறையும் உடைமைபோல் யாக்குநா - இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. இனம், மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
20. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.
21. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாகத் தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

### பிரிவு - 3

**எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. **ஏதேனும் ஒன்றுக்குப் புணர்ச்சி விதி தருக.** அ) வரமெல்லாம் ஆ) கருங்கோழி
23. **மரபுப்பிழையை நீக்குக.** அ) சிங்கக் குட்டியின் மேல் அணில் குதித்து விளையாடியது.
24. **ஏதேனும் ஒன்றுக்கு இலக்கணக் குறிப்பு தருக.** அ) ஆடுகளம் ஆ) உண்டல்
25. **கீழ்க்கண்ட ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழ்க் கலைச் சொற்களை எழுதுக.**
அ) Circular ஆ) Mass Drill
26. **விடுபட்ட இடத்தில் அடுத்து வரவேண்டிய சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**
அ) சேரன் ....... பனம்பூ, சோழன் ......... , ......... வேம்பு.
27. **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் எழுதுக.** வலம் - வளம்
28. **பின்வருவனவற்றுள் பொருந்தாத இணையைத் தேர்க.**
1) அன் - வந்தனன் 2) இன் - முடிந்தது
3) கு - காணகுவன் 4) அன் - சென்றனை

29. **மெய்ப்புத் திருத்தக் குறியீடுகளுக்கு உரிய பொருளை எழுதுக.** அ) ^ ஆ) ⸙

30. **தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.**
அ) புதினம் கல்கி எழுதினார் வரலாற்று ஒரு
பொன்னியின் செல்வன்

## பகுதி - III பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.** 2 X 4 = 8

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?
32. 'சலச வாவியில் செங்கயல் பாயும்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இளைச்சிப் பொருள் யாது?
34. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்ளுக்கு விடை எழுதுக.** 2 X 4 = 8

35. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக் காட்டுகளுடன் விவரி.
36. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தர ராமசாமி கூறுவது யாவை?
37. சமணப் பள்ளிகளில் பங்கேற்ற பெண்களின் சிறப்பு குறித்து எழுதுக,
38. தாமளிகம் என்றால் என்ன?

### பிரிவு - 3

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3 X 4 = 12

39. பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.
40. பொருள் மொழிக் காஞ்சித் துறையை விளக்கிச் சான்று தருக.
41. புத்தக திருவிழாவின் தொடக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்த சான்றோர் குறித்த அறிமுக உரை வரைக.
42. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) காலங்காத்தால எந்திரிச்சி படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்.
ஆ) காலத்துக்கேத்த மாரிப் புதுசு புதுசா மொழி வடிவத்த மாத்தனும்.
இ) தேர்வெழுத வேகமாப் போங்க. நேரங்கழிச்சி போனாப் பதட்டமாயிரும்.
ஈ) முற்சி செஞ்சா அதுக்கேத்த பலன் வராமப் போவாது.
43. **நயம் பாராட்டுக.**

சுதந்திரம் தரு கிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம் தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம் தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால் தான்
நிதம் தரும் துயர்களை நிமிர்ந்து நின் றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும். - ***நாமக்கல் கவிஞர்.***

**காது கேளாதவர்களுக்கான மாற்று வினா. பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

நகரங்களின் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானவையாகும் சமூகத்தின் கடந்த கால வளர்ச்சிக்கும் நிகழ்கால வாழ்விற்கும் அவை துணை நிற்கின்றன. தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என்றழைக்கப்படும் சென்னை, தமிழகமெங்கும் பரவி வாழும் தமிழர்களின் பண்பாட்டு அடையாளம். இந்தியாவின் முதன்மை நகரங்களுள் ஒன்றாகவும், தமிழகத்தின் தலைநகராகவும் திகழ்கின்ற சென்னையின் வரலாறும், வளர்ச்சியும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று.

வினாக்கள் : அ) பண்பாட்டுக் கூறுகளுள் முதன்மையானது எது?
ஆ) தென்னிந்தியாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படும் நகரம் எது? இ) சென்னையின் சிறப்பு என்ன?
ஈ) சென்னை பற்றி நாம் அறிய வேண்டியன யாவை?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக.** 3 X 6 = 18

44. அ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள்சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.
***(அல்லது)*** ஆ) தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றிச் செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?

45. அ) சுந்தர ராமசாமியின் 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக. ***(அல்லது)***
ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

46. அ) யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக. ***(அல்லது)*** சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

## பகுதி - V

47. **அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6
அ) தின்றேன்....... எனத் தொடங்கும் தொலைந்து போனவர்கள் பாடலை எழுதுக.
ஆ) 'பெரிது' - என முடியும் குறட்பாவை எழுதுக.



CamScanner